வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—நாராயணசாமி

தேதி 15.5.2024 நேரம் மாலை 6.10 மணி

--------------------------------------------------------------

<u>தலைப்புச் செய்திகள்</u>

- விவசாயிகள், இளைஞர்கள், பெண்கள், மற்றும் நலிவடைந்த பிரிவினரின் நலனை மேம்படுத்த, அரசு உறுதி பூண்டுள்ளதாக, பிரதமரும், மூத்த பிஜேபி தலைவருமான திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.
- நாட்டின் அரசியல் சாசனத்தையும், ஜனநாயகத்தையும் பாதுகாக்க, நடப்பு தேர்தல் மிக முக்கியம் என்று காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே கூறி உள்ளார்.
- ஆந்திரப் பிரதேசத்தில், தேர்தலுக்கு பிந்தைய வன்முறைகள் குறித்து நேரடி விளக்கம் கோரி, மாநில அரசின் தலைமைச் செயலருக்கும், காவல்துறை தலைவருக்கும், தேர்தல் ஆணையம் சம்மன் அனுப்பி உள்ளது.
- புதுச்சேரியில், போதைப் பொருட்களை கட்டுப்படுத்துவதற்கான நார்கோ ஒருங்கிணைப்புக் குழுவின், கூட்டம், மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கன் தலைமையில் இன்று நடைபெற்றது.

<u>*மோடி-பிரச்சாரம்*</u>

விவசாயிகள், இளைஞர்கள், பெண்கள், மற்றும் நலிவடைந்த பிரிவினரின் நலனை மேம்படுத்த, தேசிய ஜனநாயக கூட்டணி அரசு உறுதி பூண்டுள்ளதாக, பிரதமரும், மூத்த பிஜேபி தலைவருமான திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். இன்று மகாராஷ்டிர மாநிலம் நாசிக் மாவட்டத்தில் உள்ள டிண்டோரி பகுதியில் தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார். வெங்காய ஏற்றுமதி மீதான

தடையை தமது அரசு நீக்கியதாகவும், கடந்த 10 ஆண்டுகளில், நாட்டின் வெங்காய ஏற்றுமதி, 35 சதவிகிதம் அதிகரித்து இருப்பதாகவும் திரு நரேந்திர மோடி தெரிவித்தார். கொரோனா பெருந்தொற்றை இந்தியா சமாளித்த விதத்தை உலகமே பாராட்டியதாக அவர் மேலும் கூறினார். தொடர்ந்து மகாராஷ்டிர மாநிலம் கல்யாண் பகுதியிலும் திரு நரேந்திர மோடி தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். இன்று மாலை மும்பை நகரின் கட்கோபார் பகுதியில், அவர் சாலை பவனி நடத்துகிறார்.

<u>உத்தரபிரதேசம்</u>

ஐந்தாம் கட்ட மக்களவைத் தேர்தலின் ஒரு பகுதியாக, உத்தரபிரதேசத்தில், வரும் 20-ஆம் தேதி தேர்தல் நடைபெற உள்ள தொகுதிகளில் ஒன்றான, மோகன்லால் கஞ்ச் தொகுதியில், மூத்த பிஜேபி தலைவரும் மத்திய அமைச்சருமான திரு ராஜ்நாத் சிங் இன்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். காங்கிரஸ் கட்சியின் தேசிய தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே, காங்கிரஸ் பொது செயலர் திருமதி பிரியங்கா காந்தி ஆகியோர் ரே-பரேலி தொகுதியில் திரு ராகுல் காந்திக்கு ஆதரவாக தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர். உத்தரபிரதேஷ் முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத் இன்று ஹமீர்பூர், லக்னோ உள்ளிட்ட இடங்களில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு வருகிறார். சமாஜ்வாதி கட்சியின் தலைவர் திரு அகிலேஷ்யாதவ், பல்ராம்பூர் மாவட்டத்திலும், பகுஜன் சமாஜ் கட்சியின் தலைவர் செல்வி மாயாவதி, புண்டேல்கண்ட் பிராந்தியத்திலும் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

<u>இண்டி கூட்டணி</u>

இண்டி கூட்டணி கட்சிகள் உத்தரபிரதேஷ் மாநிலம் லக்னோவில், கூட்டு செய்தியாளர் கூட்டம் ஒன்றை நடத்தின. காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே, சமாஜ்வாதிக் கட்சியின் தலைவர் திரு அகிலேஷ் யாதவ் உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டனர். நாட்டின்

அரசியல் சாசனத்தையும், ஜனநாயகத்தையும் பாதுகாக்க, நடப்பு தேர்தல் மிக முக்கியம் என்று திரு மல்லிகார்ஜுன கார்கே, கூறினார். இளைஞர்கள் படித்தாலும் வேலை கிடைப்பதில்லை என்றும், காலியாக உள்ள அரசுப் பணியிடங்களுக்கு, ஆள் எடுக்கப்படுவதில்லை என்றும் குற்றம் சாட்டினார். மத்தியில் இண்டி கூட்டணி ஆட்சிக்கு வந்தால் காலியாக உள்ள அரசு பணியிடங்கள் அனைத்தும் நிரப்பப்படும் என்றும், படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும் என்றும் திரு அகிலேஷ் யாதவ் தெரிவித்தார்.

*<u>ராகுல்-ஒடிசா</u>*

மூத்த காங்கிரஸ் தலைவர் திரு ராகுல்காந்தி இன்று ஒடிசா மாநிலம் பலாங்கீர் பகுதியில் மோட்டார் சைக்கிள் பேரணி ஒன்றில் கலந்து கொண்டு, தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றினார். மத்தியில் இண்டி கூட்டணி அரசு பதவிக்கு வந்தவுடன் முதல் முடிவாக, ஜாதி அடிப்படையிலான மக்கள் தொகை கணக்கெடுப்பிற்கு உத்தரவிடும் என்றும், ஏழை மக்களின் பட்டியல் தயாரிக்கப்பட்டு, வேலை வாய்ப்பு, மாதாந்திர வருவாய் உதவிகள் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். மோடி அரசு மீண்டும் பதவிக்கு வந்தால், அரசியல் சாசனம் இராது என்பதை மக்கள் உணர வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். இதற்கிடையே மத்திய அமைச்சரும், மூத்த பிஜேபி தலைவருமான திரு அமித் ஷா, இன்று ஒடிசாவில் கந்தமால் உள்ளிட்ட தொகுதிகளில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட பின்னர், இன்று மாலை கட்டாக்கில் சாலை பவனி நடத்துகிறார். பிஜேபி தேசிய தலைவர் திரு ஜேபி நட்டா, புவனேஸ்வரில் பிஜேபி மகளிர் அணி தொண்டர்களின் கூட்டத்தில் கலந்து கொள்கிறார். மூத்த பிஜேபி தலைவரும் மக்களவை தலைவருமான திரு ஓம் பிர்லா ஒடிசா மாநிலம் பாலாசோர் தொகுதியில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளார்.

அமித் ஷா

மேற்கு வங்கத்தில் வரும் 20-ஆம் தேதி மக்களவைத் தேர்தல் நடைபெற உள்ள தொகுதிகளில் ஒன்றான ஹுக்ளி தொகுதியில், மூத்த பிஜேபி தலைவரும் மத்திய அமைச்சருமான திரு அமித் ஷா, இன்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரை பிஜேபி அரசு மீட்கும் என்றும், அப்பகுதி மக்கள், பாகிஸ்தானிடம் இருந்து விடுதலைப் பெறவே விரும்புவதாகவும் அவர் கூறினார். ஜம்மு-காஷ்மீரில் 370-ஆவது அரசியல் சாசனப் பிரிவு நீக்கப்பட்டதை, காங்கிரஸ், திரிணமுல் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் எதிர்த்த போதிலும், பிரதமர் திரு நரேந்திர மோடியின் இம்முடிவைத் தொடர்ந்தே ஜம்மு-காஷ்மீரில் முக்கிய மாற்றங்கள் வந்திருப்பதாகவும், குறிப்பாக சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 2 கோடி என்னும் சாதனை அளவை எட்டி இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். மேற்கு வங்கத்தில் தற்போதுள்ள அரசு, வங்கதேச ஊடுறுவல் காரர்களை, ஓட்டு வங்கியாகவே பயன்படுத்துவதாக திரு அமித் ஷா குற்றம் சாட்டினார். வங்கதேசத்தில் இருந்து வரும் இந்துக்கள், பௌத்தர்கள், ஜைனர்கள் மற்றும் சீக்கியர்களுக்கு, குடியுரிமை திருத்த சட்டத்தின் கீழ், இந்திய குடியுரிமை வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

தேர்தல் ஆணையம்

ஆந்திரப் பிரதேசத்தில் தேர்தலுக்கு பிந்தைய வன்முறைகளை கட்டுப்படுத்த நிர்வாகம் தவறியதற்கான காரணங்களை நேரில் விளக்க கோரி, மாநில அரசின் தலைமைச் செயலருக்கும், காவல்துறை தலைவருக்கும், தேர்தல் ஆணையம் சம்மன் அனுப்பி உள்ளது. நாளை புதுடெல்லியில், ஆணையத்தில் இவர்கள் ஆஜராகி, எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்களை தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் விளக்கமளிக்க வேண்டுமென ஆணையம் அறிவுறுத்தி உள்ளது. ஜனநாயகத்தில் வன்முறைகளுக்கு இடமில்லை

என்பதை ஆணையம் மீண்டும், மீண்டும் வலியுறுத்தி வந்திருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

<u>போதைப் பொருள்</u>

புதுச்சேரியில், போதைப் பொருட்களை கட்டுப்படுத்துவதற்கான நார்கோ ஒருங்கிணைப்புக் குழுவின், மாவட்ட அளவிலான 5-ஆவது கூட்டம், மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கன் தலைமையில் இன்று நடைபெற்றது. முதுநிலை காவல்துறை கண்காணிப்பாளர் திரு நாரா சைதன்யா, மற்றும், கல்வி, சுகாதாரம், சுற்றுலா, வேளாண்மை. வனவளம், சமூக நலம், துறைமுகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் உயர் அதிகாரிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களின் சாகுபடி, நடமாட்டம் மற்றும் விற்பனையை கண்டுபிடித்து தடுத்தல், பள்ளி-கல்லூரிகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துதல், மற்றும் போதை மறுவாழ்வு மையங்களை மேற்பார்வையிடுவது குறித்து இக்கூட்டத்தில் ஆலோசிக்கப் பட்டது.

<u>டெங்கு தினம்</u>

தேசிய டெங்கு தினம் நாளை கடைபிடிக்கப்படுவதை ஒட்டி, புதுச்சேரியில், டெங்கு உருவாக்கும் பொருட்களை அப்புறப்படுத்தும் நிகழ்வு, சம்பந்தப்பட்ட பல்வேறு துறைகளின் ஒருங்கிணைப்புடன் மேற்கொள்ளப்படுவதாக சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது. காகிதக் கோப்பைகள், தேங்காய் ஓடுகள், மற்றும பழைய டயர்களில் தேங்கும் மழை நீரில் தான், டெங்கு காய்ச்சலுக்கு காரணமான ஏடிஸ் வகை கொசுக்கள் உற்பத்தியாவதால், இத்தகைய பொருட்களை அகற்ற வேண்டியது அவசியம் என்றும், இதைக் கருத்தில் கொண்டே, சமுதாயத்தோடு இணைந்த டெங்கு கட்டுப்பாடு என்ற கருப்பொருள் அடிப்படையில், இவ்வாண்டு தேசிய டெங்கு தினம்

கடைபிடிக்கப்படுவதாகவும் சுகாதாரத் துறையின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது

**விபத்து**

ராஜஸ்தான் மாநிலம் நீம்-கா-தானா மாவட்டத்தில் உள்ள கோலிஹான் தாமிர சுரங்கத்தில் நேற்று பின் இரவில் லிப்ட் அறுந்து 580 மீட்டர் ஆழத்தில் விழுந்ததால் ஏற்பட்ட விபத்தில் ஆய்வு அதிகாரி ஒருவர் உயிர் இழந்த போதிலும், இதர 14 அலுவலர்கள் பத்திரமாக மீட்கப் பட்டனர். மீட்கப்பட்ட அனைவரும் ஜெய்ப்பூர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

**தொல தொடர்பு**

6-ஜி தொலை தொடர்பு தொழில் நுட்பத்தினால் நாட்டின் டிஜிட்டல் பொருளாதாரம் வலுவடைந்து, உற்பத்தி திறன் அதிகரிக்கும் என்று, மத்திய தகவல் தொழில் நுட்பத் துறைச் செயலர் திரு எஸ் கிருஷ்ணன் கூறி உள்ளார். இன்று புதுடெல்லியில், பாரத்-6ஜி மாநாட்டில் உரையாற்றிய அவர், முதலாவது தொழில் புரட்சியால் ஏற்பட்டது போன்ற தாக்கங்கள், 6-ஜி தொழில் நுட்பத்தினால் ஏற்படும் என்றார். 6-ஜி தொழில் நுட்பத்தினால், டிஜிட்டல் தரவுகள் ஏராளமாக உருவாகும் என்றும், இந்த தரவுகள் மூலம் கற்றுக் கொண்டு, செயற்கை நுண்ணறிவு இன்னும் மேம்படும் என்றும் அவர் தெரிவித்தார். நாட்டின் டிஜிட்டல் கட்டமைப்பை மேம்படுத்துவதில், தொலை தொடர்பு துறையினர் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

வானிலை□

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக வரும் 19-ஆம் தேதி வரை, தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்றைய தினம் நெல்லை, குமரி, மதுரை, திண்டுக்கல், நீலகிரி, திருப்பூர் உள்ளிட்ட மாவட்டங்கள் மற்றும் கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகளில் கனமழைக்கும், தேனி, விருதுநகர் மற்றும் தென்காசி மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் மிக கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த 5 நாட்களுக்கு தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை பொதுவாக இயல்பு நிலையிலோ அல்லது அதைவிட சற்றுக் குறைவாகவோ அமையும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஐபிஎல்

ஐபிஎல் கிரிக்கெட்டில் இன்று இரவு 7.30 மணிக்கு குவஹாத்தியில் நடைபெறும் போட்டியில் பஞ்சாப்-ராஜஸ்தான் அணிகள் மோத உள்ளன. நேற்று இரவு டெல்லியில், டெல்லி-லக்னோ அணிகளுக்கு இடையே நடைபெற்ற போட்டியில் டெல்லி அணி 19 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

பிஜேபி-கெஜரிவால்

டெல்லி முதலமைச்சரும் ஆம்-ஆத்மி கட்சியின் அமைப்பாளருமான திரு அரவிந்த் கெஜரிவாலின் தனி உதவியாளர், கட்சி எம்பி திருமதி ஸ்வாதி மலிவாலிடம் தவறான முறையில் நடந்து கொண்டதாக கூறப்படும் பிரச்சனையில், திரு கெஜரிவால் மவுனம் காப்பதாக பிஜேபி குற்றம் சாட்டி உள்ளது. பிஜேபி செய்தி தொடர்பாளர் திருமதி ஷாஜியா இல்மி,

புதுடெல்லியில் இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசுகையில், திரு கெஜரிவாலின் இல்லத்தில் நடந்தது என்ன என்பது பற்றிய உண்மைகளை, நாட்டு மக்களுக்கு திரு கெஜரிவால் வெளியிட வேண்டும் என வலியுறுத்தினார். தனி உதவியாளர் மீது திரு கெஜரிவால் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார். முன்னதாக டெல்லி பிஜேபி மகளிர் அணியினர், இந்த சம்பவத்தைக் கண்டித்து இன்று புதுடெல்லியில் ஆரப்பாட்டம் மேற்கொண்டனர். பெண்களின் பாதுகாப்பு குறித்து தொடர்ந்து பேசி வந்தவரும், டெல்லி மகளிர் ஆணையத்தின முன்னாள் தலைவருமான திருமதி மலிவாலுக்கே, தற்போது பாதுகாப்பு இல்லை என்று, டெல்லி பிஜேபி தலைவர் திரு வீரேந்திர சச் தேவா கூறினார்.

*__சிசோடியா (8)__*

டெல்லி அரசின் கலால் கொள்கை தொடர்பான வழக்கில் முன்னாள் டெல்லி முதலமைச்சர் திரு மணீஷ் சிசோடியாவின் நீதிமன்றக் காவலை வரும் 30-ஆம் தேதி வரை நீட்டித்து டெல்லி சிறப்பு நீதிமன்றம் இன்று உத்தரவிட்டுள்ளது. ஏற்கனவே விதிக்கப்பட்ட காவல் காலம் முடிவடைந்ததைத் தொடர்ந்து, திரு சிசோடியா இன்று காணொளி காட்சி மூலம், சிறப்பு நீதிபதி முன்னிலையில் ஆஜரானார். அவரது ஜாமீன் மனு மீதான விசாரணைகளை நேற்று சிறப்பு நீதிமன்றம் முடித்துக் கொண்டு தீர்ப்பை ஒத்தி வைத்துள்ளது.